கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் வந்தார்கள். இங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பரிசிலனை செய்து மொத்தமாக ஒரு அறிக்கை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கிருஷ்ணா-கோதாவரி தண்ணீரைப்பற்றி முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே முடிவு எடுக்கப்பட்டும், இன்னும் பரிசிலனையில் இருந்து கொண்டு வருகிறது என்று கனம் அமைச்சர் சொல்கிறார்கள். அப்படி என்றால் மக்களிடத்தில் நாங்கள் என்ன சொல்வது என்பதைப் பற்றி கனம் அமைச்சர் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினருக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய சந்தேகம் இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை. இப்போது பரிசிலனையில் இருப்பது என்னவென்றால், குலாதி கமிஷன் கிருஷ்ணா-கோதாவரி தண்ணீரை மற்ற ராஜ்யங்கள் எப்படி பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகு, சென்னை நகரத்திற்குக் குடி தண்ணீர் வேண்டுமென்று சொன்னதன் பேரில், அவர்கள் இதனைப் பரிசிலனை செய்து குடி தண்ணீர் கொடுக்கலாம் என்று சமீபத்தில்தான் சொன்னார்கள். அதிலிருந்து விட்டுவிடாமல் தொடர்ந்து இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறதை பரிசிலனை செய்துகொண்டிருப்பதாகக் கனம் அமைச்சர் சொன்னார்கள். இந்த கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டு வருவதில் முழு கவனம் செலுத்தியிருக்கிறார்களா? அல்லது வேறு சில திட்டங்களை எடுத்துக் கொள்ளவும் அரசாங்கம் முயற்சி செய்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கிருஷ்ணா தண்ணீரோடு நின்று விடவில்லை. காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதையும் பரிசிலனை செய்துகொண்டு இருக்கிறோம். அதோடுமட்டுமல்லாமல் ஊற்றுத் தண்ணீரை, பூமியின் அடியில் இருக்கும் தண்ணீரை கிணறுகள் வெட்டி எடுப்பதையும் பரிசிலித்து வருகிறோம். அது மட்டுமல்லாமல், அருகாமையில் இருக்கும் 'சர்பேஸ் வாட்டர்ஸ்'யையும் எடுப்பதற்குத் தொடர்ந்து பரிசிலனை செய்து எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

Metalling of roads (Paramakudi taluk)

* 158 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal pending with Government for metalling Paramakudi to Nainarkoil Road and Ilayangudi to R.S. Mangalam Road in Paramakudi taluk, Ramanathapuram district ; and

(*b*) if not, whether there is any proposal to include it in the next year's Budget at least?

[5th March 1965

THE HON. SRI. V. RAMAIAH : (*a*) & (*b*) There is no proposal for metalling the Paramakudi to Nainarkoil road during the Third Plan period and hence the inclusion of this work in the next year's Budget does not arise. The cost of work of metalling the Ilayangudi to R. S. Mangalam road is estimated at Rs. 12.00 lakhs and the Government of India, have sanctioned a grant for it from the Central Road Fund (Ordinary) Reserve. The Chief Engineer has been permitted to take up this work for execution now.

Over-bridges at Level Crossings in Madurai

* 159. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to construct over-bridges, at the Railway Level Crossings near Subramanyapuram and near Meenakshi Mills at Madurai ; and

(*b*) if so, when the execution of the said works are expected to be taken up?

THE HON. SRI. V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The two schemes are proposed to be taken up for execution during the Fourth Five-Year Plan period.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : கனம் தலைவர் அவர்களே, மேம்பாலம் கட்டுவது சம்பந்தமாக பல வருஷங்களாகக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. சட்ட சபையிலும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இதுவரையில் எந்தவிதமாகக் கட்டவேண்டும் என்று சொல்லக்கூடிய அளவிலே திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இதனால் ஏற்படுகின்ற சங்கடங்கள் மந்திரிகள் அனைவருக்கும் தெரியும். ஆகையினாலே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டிலாவது இதைக் கட்டுவதற்கு உண்மையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமைப்படி நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேலையைத் தொடங்கி கட்டி முடிக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. இது போன்ற மேம்பாலங்கள் மதுரையில் மாத்திரம் அல்ல, ராஜ்யத்தில் அநேகமாக எல்லா நகரங்களிலும் பல தேவைப்படுகின்றன. மொத்தமாகப் பார்க்கும்பொழுது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் ஒதுக்கிய தொகையை விட மிக அதிகமான தொகை செலவிடவேண்டிய ஒரு கட்டம் இருந்தது. அது மாத்திரம் அல்ல. நெருக்கடி காரணமாக வேலைகளையெல்லாம் கொஞ்சம் தாமதப்படுத்த வேண்டிய நிலைமை இருந்தது. இருந்தாலும்கூட, சென்னை நகரத்தில் இந்த வேலையைத் தாமதப்படுத்தக் கூடாது என்று கருதி, இந்தப் பக்கத்தில் ஒரு சப்-வே (ரிசர்வ் பாங்கு சமீபம்) திருவெற்றியூரில் ஒரு மேம்பாலம், கோடம்